1994 ஏப்ரல் 26]

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.. விரைவில் வகுப்பறை வசதி செய்துதர அரசு முயற்சிகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரே ஒரு அரசுக் கல்லூரிதான் இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் எல்லாம் அங்கே பயிலுகின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த ஹாஸ்டலில் இருக்கிற 4 அறைகளை வகுப்பறைகளாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே அங்கே மாணவர்களுக்கு விடுதியிலே இடம் இல்லாத காரணத்தினாலே அந்த புதுக்கோட்டை மாமன்னர் கலலூரிக்கென்று தனியாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை கல்லூரி முதல்வரிடமிருந்து புதிய கட்டிடம் கட்டவேண்டுமென்று எந்தவிதமான முன்மொழிவும் பெறப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, முன்மொழிவுகளை அனுப்பச் செய்தால் அரசு நிதிநிலையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 398, திரு என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

398--

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குணவாசல், மோவூர் கிராமங்களில் கிளை நூலகம் அமைத்தல்.

***21644--திரு. என். ஆர். ராஜேந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குணவாசல், மோவூர் கிராமங்களில் கிளை நூலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயில் தொகுதி, குணவாசல், மோவூர் கிராமங்களுக்குக் கிளை நூலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

[*1994 ஏப்ரல் 26*

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு வந்த பிறகுதான் மனிதனின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சியைக் கருதி ஊட்டச் சத்து திட்டமும், அறிவு வளர்ச்சியைக் கருதி அறிவொளி இயக்கமும் திறம்பட செயல்பட்டு வருகிறது. அறிவு பெருக்கம் குறித்து நான் நூலகம் கேட்டுள்ள அந்த இரண்டு கிராமங்களும் அதிக மக்கள் தொகையைக் கொண்ட கிராமங்கள் ஆகும். அங்கே நூலகம் அமைக்க வேண்டுமென்றால் பொதுமக்கள் அரசுக்கு அளிக்கவேண்டிய ஒத்துழைப்புகள் ஏதாவது உள்ளதா, அப்படி ஒத்துழைப்பு அளிக்கப்பட்டால் அரசு நூலகம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிளை நூலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொது நூலகச் சட்டம் 1948 விதி 45(4) (பி)ன்படி மக்கள் தொகை ஐந்தாயிரத்திற்கும் அதிகமாக இருக்கின்ற கிராமங்களுக்குத்தான் கிளை நூலகம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குணவாசல் மற்றும் மோவூர் கிராமங்களின் மக்கள் தொகை 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி முறையே 2891 மற்றும் 1675 மட்டுமே ஆகும். ஆகவே கிளை நூலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அங்கே இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் அக்கறையோடு கேட்டிருக்கின்ற காரணத்தால் அங்கே ஒரு பகுதி நேர நூல் நிலையம் திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய பங்கு என்ன என்பதைப் பற்றி கேட்டார்கள். அரசு சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது. குறைந்தது 5 செண்ட் முதல் 10 செண்ட் வரையிலான காலி மனையை மாவட்ட நூலக அலுவலரின் பெயரிலே பத்திரப் பதிவு செய்து தரவேண்டும். ரூபாய் இரண்டாயிரம் ரொக்கம் அல்லது அதற்குச் சமமான நூலக தளவாடங்களை நன்கொடையாக வழங்க வேண்டும். பகுதி நேர நூலகம் செயல் படுவதற்கு ஏற்ற வகையில் உறுதியான வாடகை இல்லாத கட்டிடம் ஒன்றை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பெற்றுத் தரவேண்டும். அதற்கு மேலே நூறு உறுப்பினர்களை அவர் சேர்த்து உதவ வேண்டும். இவை அனைத்தையும் நிறைவு செய்வதாக இருந்தால், அங்கே ஒரு பகுதி நேர நூலகம் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 399, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.